**தலைப்பு 22 – நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூலை 10 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 21 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அலுவலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன என்பதும்

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.2 ஆம் பந்தியில் உள்ள அவதானிப்பு தொடர்பாக முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் மீது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதும் ஆகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணைக்கப்பட்ட ஏசீஏ-எவ் மாதிரிப் படிவத்திற்கிணங்க தயாரிக்கப்பட்ட நிதிச் செயலாற்றல் கூற்றின் வருமானமல்லாத பெறுவனவுகளின் கீழ் முற்பணப் பெறுவனவுகளாக ரூபா 1,046,377 தொகை சுட்டிக்காட்டப்பட வேண்டிய போதிலும் ரூபா 830,934 தொகை முற்பணப் பெறுவனவுகளாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மேலும் ரூபா 2,317,945 தொகை முற்பணக் கொடுப்பனவாக சுட்டிக்காட்டப்பட வேண்டிய போதிலும் ரூபா 1,599,249 தொகை மாத்திரமே முற்பணக் கொடுப்பனவாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. | 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட மாதிரிப் படிவங்களிற்கிணங்க தொகைகள் மற்றும் தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் சரியாக சுட்டிக்காட்டப்பட வேண்டும். | மொத்த முற்பணப் பெறுவனவுகள் ரூபா 1,046,377 தொகையாக காணப்பட்ட போதிலும் அதில் ரூபா 830,934 தொகையான முற்பணம் காசாக பெறப்பட்டிருந்ததுடன் ரூபா 215,443 மிகுதி தொகை குறுக்குப் பதிவுகள் ஊடாக பெறப்பட்டிருந்தன. இதனால் ரூபா 830,934 தொகை மாத்திரம் வருமானமல்லாத பெறுவனவுகளாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் ரூபா 1,599,249 மாத்திரமே பதவியணியினரிற்கான முற்பணக் கொடுப்பனவாக காணப்பட்டதுடன் ரூபா 718,696 மிகுதி தொகை திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களிற்கிடையே இடமாற்றம் செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளின் தீர்ப்பனவாக உள்ளது. இதனால் அத் தொகை நிதிச் செயலாற்றல் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கவில்லை. |

## 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சிகாஸ் நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணங்க மீளாய்வாண்டிற்கான சொத்து மீதிகள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சொத்து அறிக்கை அலுவலகத்தால் பெறப்பட்டிருக்கவில்லை. இதனால் நிதிக்கூற்றுக்களின் ஏசீஏ-6 படிவத்திற்கிணங்க தயாரிக்கப்பட்ட நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றில் சுட்டிக்காட்டப்பட்ட சொத்து மீதிகளுடன் குறித்த சொத்து மீதிகளை ஒப்பீடு செய்ய முடியாதிருந்தது. | நிதியல்லாச் சொத்துக்கள் கூற்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட சொத்து மீதிகள் அரச கணக்குகள் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சொத்து அறிக்கையுடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். | எங்களது அலுவலகத்தில் 2019 ஆம் ஆண்டிலிருந்து சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் சொத்துக்களின் தகவல்கள் அந் நிகழ்சித்திட்டத்திலுள்ள குறைபாடுகள் காரணமாக பதிவு செய்யப்பட முடியாதிருந்தன. இதனால் சொத்து அறிக்கை பெறப்பட முடியாதிருந்தது. |

## 1.6.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| அவதானிப்பு | | | |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| **அரச நிதிச் சுற்றறிக்கைகள்** | | | |
| 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தி | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டு அது தொடர்பான அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பொருள் மெய்மையாய்வு பூர்த்தி செய்யப்பட்டு அது தொடர்பான அறிக்கையின் பிரதியொன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டிற்கான வருடாந்த பொருள் மெய்மையாய்வை பூர்த்தி செய்வதற்கும் அறிக்கையின் பிரதியொன்றை சமர்ப்பிப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 செயலாற்றல்

(அ) 2019 சனவரி 01 இல் உள்ளவாறு நிலுவையாகவுள்ள, புலனாய்வு செய்து அறிக்கையிடப்பட வேண்டிய முறைப்பாடுகளின் எண்ணிக்கை 479 ஆக காணப்பட்டன. 2019 சனவரி தொடக்கம் திசெம்பர் 31 வரை அலுவலகத்திற்கு கிடைத்த 1,888 முறைப்பாடுகள் உள்ளடங்கலாக 2019 ஆம் ஆண்டில் புலனாய்வு செய்யப்பட வேண்டிய முறைப்பாடுகளின் மொத்த எண்ணிக்கை 2,367 ஆக காணப்பட்டது.

(ஆ) அம் முறைப்பாடுகள் தொடர்பாக பின்வருமாறு அலுவலகம் நடவடிக்கை எடுத்திருந்தது.

(i) இடைப்பகுதி விசாரணையின் பின்னர் புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 63 ஆக காணப்பட்டது.

(ii) அறிக்கைகள் கோரப்பட்ட பின்னர் கோரிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 233 ஆக காணப்பட்டது.

(iii) உரிய நிறுவனங்களிடமிருந்து அறிக்கைகள் கோரப்பட்டு முறைப்பாட்டாளர்களிற்கு அறிவித்த பின்னர் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத முறைப்பாடுகளின் எண்ணிக்கை 616 ஆக காணப்பட்டது.

(iv) சுருக்கமாக முடிவு காணப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை 494 ஆக காணப்பட்டது.

(இ) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புலனாய்வு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட வேண்டிய 961 முறைப்பாடுகள் மிகுதியாக காணப்படுகின்றன.

### 2.2 திட்டமிடல்

#### 2.2.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பவற்றின் தொகைகளிற்கிடையே ரூபா 470,000 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டிற்கிணங்க செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு முன்னர் செலவின மதிப்பீடு தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததால் அவ் வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன. |

### 2.2.2 பெறுகைத் திட்டம்

பெறுகைத் திட்டம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் 02 செலவின விடயங்களிற்கான மதிப்பிடப்பட்ட நிதியேற்பாடு ரூபா 1,100,000 ஆக காணப்பட்ட போதிலும் பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட செலவினம் ரூபா 1,732,000 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க பெறுகைத் திட்டமானது மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டை ரூபா 632,000 ஆல் விஞ்சி தயாரிக்கப்பட்டிருந்தது. | பெறுகைத் திட்டமானது மதிப்பிடப்பட்ட நிதியேற்பாட்டிற்கு இணங்க தயாரிக்கப்பட வேண்டும். | செயல்நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு முன்னர் செலவின மதிப்பீடு தேசிய பாதீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டிருந்ததால் அவ் வேறுபாடுகள் ஏற்பட்டிருந்தன. |
| (ஆ) ரூபா 622,000 பெறுமதியில் மதிப்பீடு செய்யப்பட்டு 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைகளாக எதிர்பார்க்கப்பட்டு பெறுகைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏழு செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 05/2019 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மூலதன செலவினம் தொடர்பாக வரையறைகள் விதிக்கப்பட்டமை, மூலதன செலவினம் போன்றவற்றிற்கான கட்டுநிதியை விடுவிப்பதற்காக எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டதன் காரணமாக கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாமை போன்ற விடயங்களினால் பெறுகைத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பெட்டிசங்கள் தொடர்பான செயற்பாடுகளை முகாமை செய்வதற்கு மென்பொருள் முறைமையொன்றை நிறுவுவதற்காக ரூபா 500,000 தொகையும் அலுவலகத்திலுள்ள கணனிகளின் வலையமைப்பிற்காக ரூபா 150,000 தொகையும் வருடாந்த மதிப்பீடு – 2019 இன் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அச் செயற்பாடுகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்டவாறு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 05/2019 ஆம் இலக்க பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் மூலதன செலவினம் தொடர்பாக வரையறைகள் விதிக்கப்பட்டமை, மூலதன செலவினம் போன்றவற்றிற்கான கட்டுநிதியை விடுவிப்பதற்காக எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டதன் காரணமாக கொள்வனவுகள் மேற்கொள்ளப்படாமை போன்ற விடயங்களினால் பெறுகைத் திட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்ட கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |